# திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## வணிகமாணிக் கற்கைநெறிக்கான அனுமதி – 2018/ 2019

மேற்படி வணிகமாணிக் கற்கைநெறிக்கு கல்வியாண்டு 2018/2019 மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக நடாத்தப்பட்ட நேர்முகப்பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம், தாங்கள் இக்கற்கைநெறிக்கு ஒருவருட விலக்களிப்புடன் அனுமதிக்கப்பட்டுள்ளீர்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள, கற்கைநெறிக்கு பதிவுசெய்வதற்கான விண்ணப்பப்படிவத்தையும், மக்கள் வங்கியில் பணம் கட்டுவதற்கான உறுதிச்சீட்டையும், பூர்த்தி செய்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**பதிவு செய்யும் போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

- பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவம்
- மக்கள் வங்கியில் பணம் செலுத்தியமைக்கான உறுதிச்சீட்டு (மூலப்பிரதி)
- கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ் (மூலப்பிரதியும், புகைப்படப்பிரதியும்)
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (மூலப்பிரதியும், புகைப்படப்பிரதியும்)
- திருமணச்சான்றிதழ் (பெண்கள்) (மூலப்பிரதியும், புகைப்படப்பிரதியும்)
- தேசிய அடையாளஅட்டை (புகைப்படப்பிரதி)
- தற்போது வகிக்கும் பதவியை உறுதிப்படுத்தும் சான்றிதழ்
- கணினி அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள்
- ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
- சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட இரண்டு புகைப்படங்கள்(**3.0cmx3.5 cm, White Background)**

**கற்கைநெறிக் கட்டணம் தொடர்பானவிபரம்**

| வருடம் | கட்டணம் செலுத்தப்பட வேண்டிய காலம் | தவணைக் கட்டணம் |
|---|---|---|
| 1ம் வருடம் | பதிவின் போது | ரூபா . **52,500.00** |
| 2ம் வருடம் | இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுக்கு முன்பு கட்டணம் செலுத்துதல் வேண்டும் | ரூபா . **39,000.00** |
| 3ம் வருடம் | மூன்றாம் வருட முதலாம் அரையாண்டுக்கு முன்பு கட்டணம் செலுத்துதல் வேண்டும் | ரூபா . **39,000.00** |
| 4ம் வருடம் | நான்காம் வருட முதலாம் அரையாண்டுக்கு முன்பு கட்டணம் செலுத்துதல் வேண்டும் | ரூபா . **39,000.00** |
| **மொத்தக் கட்டணம்** | | ரூபா . **169,500.00** |

- மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையின் பிரகாரம் ஒவ்வொரு கட்டணங்களும் முழுமையாக செலுத்தப்பட வேண்டும்.

பதிவினை மேற்கொள்வதற்காக, மேற்குறிப்பிட்ட ஆவணங்களுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திற்கு **தங்களுக்கு என ஒதுக்கப்பட்ட தினத்தில்** நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மேற்கூறப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறுதல், அல்லது போலியான ஆவணங்களை சமர்ப்பித்தல், ஏற்கனவே உயர்கல்வி நிறுவனமொன்றில் உள்வாரியாகவோ/வெளிவாரியாகவோ ஏதாவது ஒரு கற்கைநெறியின் பொருட்டு பதிவுகளை மேற்கொண்டிருத்தல் மற்றும் குறித்த திகதியில் நேரில் சமூகமளிக்காதோரின் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும் என்பதுடன், எக்காரணம் கொண்டும் கொடுப்பனவுகள் எவையும் மீளளிக்கப்படமாட்டாது, என்பதனையும் தாங்கள் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

**முக்கிய குறிப்பு** :குறித்த திகதியில், மேற்குறிப்பிட்ட ஆவணங்களுடன் பதிவினை மேற்கொள்ளாதோரின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன், எவ்வித அறிவித்தலுமின்றி காத்திருப்போர் பட்டியலில் இருந்து அவ்வெற்றிடம் உடனடியாக நிரப்பப்படும் என்பதனைக் கவனத்திற்கொள்ளவும்.

J. Ariyaman

**பிரதிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.**